# பாய்சி தமிழ்ச் சங்கம்
# BOISE TAMIL SANGAM

# சுவடி

பாய்சி தமிழ்ச் சங்க இதழ்

Webpage : https://www.boisetamilsangam.org
Facebook : www.facebook.com/boisetamilsangam


பிப்ரவரி 2018 சுவடி 1

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

வாழ்க தமிழ்!! வளர்க அதன் புகழ்!!

பாய்சி மற்றும் அதன் புறநகரில் வாழும் அனைத்து தமிழ் மக்களுக்கும், பாய்சி தமிழ் சங்க குழுவினரின் மனமார்ந்த வணக்கங்கள்! 2014 ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்ட நமது சங்கம் வெற்றிகரமாக ஐந்தாம் ஆண்டினை தொடங்க உள்ளது. இவ்வாண்டு "சுவடி" என்றழைக்கப்படும் இ-பத்திரிக்கையில் தொடங்கி, தமிழ் புத்தாண்டு விழா, கோடை திருவிழா, நாடகம், திரைப்படம் திரையிடல் என்று பல்வேறு உற்சாகமான நிகழ்வுகளை உங்கள்முன் கொண்டுவர இருக்கிறோம். மேலும் இளைஞர்களுக்கு உள்ளிருப்பு பயிற்சி அளிக்கும் வகையில் ஒரு சிறிய இளைஞர் அணி அமைக்கும் திட்டத்தையும் முடிவு செய்துள்ளோம். இவ்வாறு தமிழ் நிகழ்ச்சிக்களை நடத்துவதன் மூலமும், தமிழ் பண்டிகைககளை கொண்டாடுவதன் மூலமும் பாய்சியில் வாழும் அனைத்து தமிழ் மக்களையும் ஒன்றுபடுத்தி, அவர்களிடையே தொடர்பினை மேம்படுத்தும் சங்கமாக இது அமைய வேண்டும் என்பதே எங்களது முக்கிய குறிக்கோள். இவை அனைத்தையும் செயல்படுத்த உங்களின் முழு ஆதரவு இச்சங்கத்திற்கு கிடைக்கும் என்று திடமாக நம்புகிறோம்.

*-கமல் முத்துகிருஷ்ணன், துணைத் தலைவர்.*




அனைவர்க்கும் வணக்கம்! பாய்சி தமிழ்ச் சங்கத்தின் "***சுவடி***" என்ற இ-பத்திரிகையின் முதலாவது பதிப்பில் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். முறையாக தமிழ்ச் சங்கம் ஆரம்பித்து 4 வருடங்கள் முடிந்து 5 ஆம் வருடத்தில் அடியெடுத்து வைக்கும் இந்நிலையில் இந்த வருட முயற்சியாக "***சுவடி***" அறிமுக படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறோம். "***சுவடி***" தற்போது சோதனை முயற்சியாக 3 மாதங்களுக்கு ஒரு முறை வர இருக்கிறது. "***சுவடி***" பாய்சி தமிழ் மக்களை ஒன்று சேர்த்து ஒரு குழுவாக செயல்பட ஏதுவாக அமையும் என்று எதிர் பார்க்கிறோம். இனி வரும் இதழ்களில் பாய்சி வாழ் தமிழர்களின் அருமையான படைப்புகளை வெளியிட இருக்கிறோம். இதன் மூலம் பாய்சி தமிழ் மக்களின் திறமைகளை வெளிப்படுத்த இது ஒரு களமாக அமையும் என்று நம்புகிறோம். ***சுவடி*** வாசகர்கள் தங்கள் படைப்புக்களை (கவிதை, கட்டுரை, துணுக்குகள், சமையல் குறிப்புக்கள், கோலங்கள், குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் சாதனை- கள்(kids and adults achievements), புது தமிழ் குடும்பங்கள் வரவு, விளம்பரங்கள் மற்றும் பல) அனுப்பி பத்திரிக்கையை வெற்றிகரமாக கொண்டு செல்ல ஆதரவளிக்குமாறு அன்புடன் கேட்டு கொள்கிறோம். உங்கள் படைப்புகளை admin@boisetamilsangam.org என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். இவை அனைத்தையும் தாங்கி "சுவடி" மின்னஞ்சல் மூலமாக உங்களை வந்தடையும்.

பாய்சி தமிழ்ச் சங்கத்தின் புதிய வலைத்தளம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. சங்க செயல்பாடுகளை பாய்சி தமிழ்ச் சங்க வலைத்தளத்திலும் சென்று பார்க்கலாம். வலைதள முகவரி : https://www.boisetamilsangam.org

**Facebook :** www.facebook.com/boisetamilsangam

*- உமா ராமசாமி, பொறுப்பாசிரியர்.*



# *2018 தமிழ்ச் சங்க நிர்வாகக் குழு*

ஆரம்ப குழும உறுப்பினர்கள் - திரு. நாகா சந்திரசேகரன், திரு. கே. பி. சீனிவாசன், திரு. சுரேஷ் முருகய்யா, திரு. ராஜேஷ் நாகராஜன் மற்றும் திரு. ராதா பத்மநாபன்.

தலைவர் - திரு. நாகா சந்திரசேகரன்

துணைத்தலைவர் - திரு. கமல் முத்துகிருஷ்ணன்

செயலாளர் - திரு. சேது விஸ்வநாதன்

பொருளாளர் - திருமதி. கௌரி தண்டபாணி

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் - திரு. ராம் ராஜு, திருமதி. உமா பழனிச்சாமி, திரு. வினோத், திரு. ராம் நிவாஸ்


வலைதள ஒருங்கிணைப்பாளர் - திரு. ராமானுஜம் சுந்தரராஜன்

செய்திமடல் /Newsletter/magazine பொறுப்பு-திருமதி. உமா ராமசாமி

விளம்பரம்,தகவல் தொடர்பு மற்றும்

நன்கொடை/ஆதரவாளர்கள் பொறுப்பு - திரு. தீபக் வேதாச்சலம்

தமிழ் பள்ளி ஒருங்கிணைப்பாளர் - திரு. ராஜேஷ் நாகராஜன்



# சங்கத்தின் செயல்பாடுகள்

பாய்சி நகரில் வாழும் தமிழ் மக்கள் பெருகி வரும் இந்நிலையில், அவர்கள் தங்கள் பாரம்பரியம், மொழி மற்றும் கலாச்சாரத்தைப் பேணிக் காக்கும் ஒரு தளமாக, இன்றைய மற்றும் அடுத்தத் தலைமுறையினர் தங்கள் கலை, பண்பாடு, இலக்கியம், இயல், இசை, நாடகம் போன்ற அறிவுச்சார்த் திறமைகளை வெளிப்படுத்தும் ஒரு அமைப்பாக மட்டுமல்லாமல் இங்கும் இந்தியாவிலும் தொண்டார்வம் உள்ள மக்களுடனும், சக தொண்டு நிறுவனங்களுடனும் சேர்ந்து உதவிக் கரம் நீட்டிச் சமூகச் சேவை செய்யும் ஒரு அமைப்பாகவும் தொடர வழி வகுக்கும் வகையில் இலாப நோக்கமற்ற அமைப்பாக (Non-Profit Organization) மாற்ற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில், பாய்சி தமிழ் பள்ளி நிறுவப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. மேலும், கடந்த இரண்டு வருடங்களாக "மகம் நிறுவனம்" மதுவந்தி குழுவினரின் நாடகம் இங்கு அரங்கேறியது. அந்த வரிசையில் இனி வரும் வருடங்களில், ஆண்டுதோறும் பொங்கல் திருவிழா (ஜனவரி), தமிழ் புத்தாண்டு விழா (ஏப்ரல்) மற்றும் கோடை திருவிழா (செப்டம்பர்) என்று பொழுதுபோக்கும், விழிப்புணர்வும் ஊட்டும் பல்வேறு நிகழ்ச்சிகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. "சுவடி" என்று அழைக்கப்படும் தமிழ்ச் சங்க இதழ் இந்த வருடம் முதல் அறிமுகப்படுத்தபடுகின்றது. மேலும் பாய்சி தமிழ்ப்பள்ளி மூலம் அனைத்து தமிழ் சிறுவர்/சிறுமியர் மட்டும் அல்லாமல் தமிழ் மொழி கற்க ஆர்வம்கொண்ட பிற மொழி மக்களுக்கும் தமிழ்க்கல்வி கற்பிக்கப்படும். தமிழ்த் திரை ப்படங்களை திரையிட முயற்சிக்கப்படும். இவை அனைத்தையும் செயல் படுத்த பாய்சி தமிழ் சங்க நிர்வாகிகள் குழு முயற்சிக்கும். பாய்சி வாழ் தமிழ் மக்களின் பேராதரவுடன் இச்சங்கமும் அதன் நடவடிக்கைகளும் படிப்படியாகவும் நிலையானதாகவும் வளர்க்கப்படும். நன்றி.

**-திரு. சேது விஸ்வநாதன், செயலாளர்.**



# பாய்சி தமிழ்ச் சங்கம்

[https://www.boisetamilsangam.org](https://www.boisetamilsangam.org)

## பார்வை (vision)

தமிழ் மொழி, கலாச்சாரம் மற்றும் தமிழ் மக்களின் முன்னேற்றத்தை மேம்படுத்துவது.
(Advancement of Tamil language, culture and the cause of Tamil people)

## பணி (mission)

1. தமிழ் மக்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்களிடையே தமிழ் மற்றும் தமிழ் கலாச்சாரத்தை கொண்டாடுவது.
(To celebrate Tamil language and culture among Tamil people and others interested in learning about Tamil )

2. தமிழ் நிகழ்ச்சிகைளை நடத்துவது, பண்டிகைகளை கொண்டாடி அதில் அனைவரையும் பங்கேற்க வைப்பது மற்றும் அதன் மூலம் அடுத்த தலைமுறைக்கு நமது கொண்டாட்டங்களின்/சம்பிரதாயங்களின் முக்கியத்துவத்தை உணர்த்துவது.
(Conduct events that celebrate Tamil functions and encourage everyone to participate. Use these avenues to teach next generation about the significance of festivals and rituals)

3. பாய்சி வாழ் தமிழ் மக்களை ஒன்று படுத்தி அவர்களுக்கிடையே தொடர்பை மேம்படுத்துவது
(Unite people living in Boise and help promote interaction among Tamils)

4. தமிழ் மொழி மற்றும் தமிழ் மக்களின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் ஆதரவளிப்பது.
(Provide support to the development and propagation of Tamil language , Tamil people and cause of Tamil)

5. பாய்சியில் உள்ள இந்திய சமூகத்தினிடையே தமிழ் மற்றும் தமிழ் கலாச்சாரத்தை பரப்புவது மற்றும் வருங்கால இளம் தலைமுறையினர் இடையே தமிழை பற்றிய விழிப்புணர்வு , மொழி மற்றும் கலாச்சார உணர்வை மேம்படுத்துவது.
(spread the Tamil culture within the existing Indian community and instill within our upcoming youngsters the value and essence of Tamil)

# *தமிழ்ச் சங்கத்தின் 2018 -ம் ஆண்டுக்கான இலக்குகள்*
# *Tamil Sangam Goals - CY 2018*

***அமைப்பு:***

***Organization*** :

இயக்குனர் குழு மற்றும் நிர்வாக குழு நிறுவுதல்.

(Establish office positions and board of directors )

காலாந்திர இயக்குனர் குழு சந்திப்பு , இரு மாத அதிகாரிகள் சந்திப்பு மற்றும் வருடாந்திர சந்திப்பு.

(Conduct Quaterly BoD meetings, bi-monthly office bearers meetings and annual meetings)

பாய்சி தமிழ்ச் சங்கத்தை அதிகாரபூர்வமாக லாப நோக்கமற்ற இயக்கமாக (501சி ) பதிவு செய்வது.

(Finalize by-laws and achieve non-profit status (501C))

***தகவல் தொடர்பு***

***Communication***

வலைத்தளம் நிறுவுதல்.

(Establish web page )

தமிழ்ச் சங்க உறுப்பினர் பட்டியல் பராமரித்தல்.

(Clear membership list and status)

இ -பத்திரிகை துவங்குதல் மற்றும் 4 இதழ்கள் வெளியிடுதல்.

(Quaterly tamil e-magazine, publish 4 issues )

***நிகழ்வு மேலாண்மை***

***Event Management***

இரண்டு முக்கிய நிகழ்வுகள் -தமிழ் புத்தாண்டு (2018) - மேடை நிகழ்ச்சி, பொங்கல் - 2019 (ஜனவரி) - திருவிழா பாணி நடத்துதல் மற்றும் கோடை திருவிழா,

(Conduct two major events Tamil new year(April )- stage event, Pongal 2019(January)- thiruvizha style, summer picnic (Tamil thiruvizha))

நாடகம், இசை, திரைப்படங்கள் திரையிடுதல்.

(Drama, Music, screen movies )

***நிதி***

***Financial***

குறைந்தபட்சம் வருடத்திற்கு ஒரு முறை தமிழ்நாட்டிற்கு ஏதேனும் ஒரு வகையில் நன்கொடை வழங்க நிதி திரட்டுதல்.

(Generate revenue to donate for at atleast 1 cause in Tamil Nadu)

தமிழ்ச் சங்கத்தின் கணக்குகளை பராமரித்தல்.


(Maintaining accounts in Tamil Sangam and file taxes if necessary )

தமிழ்ச் சங்கத்தின் ஆதரவாளர்களை கூட்டுவதன் மூலம் சங்கத்தின் வருவாயை கூட்டுதல்.
(Sponsor list, regular sponsors, Generate revenue)

***<u>தமிழ்ப்பள்ளி</u>***
***<u>Tamil school</u>***

தற்போதைய பள்ளிவருட வகுப்புகளை வெற்றிகரமாக முடித்து புதிய வகுப்புகள் ஏற்பாடு செய்தல்.
(Finish current school year and initiate new classes)

பாய்சி நகரில் உள்ள சில பள்ளிகளுக்கு சென்று தமிழ் மொழியின் பெருமைகளை எடுத்துக் கூறி சிறுவர்/சிறுமிகளிடையே தமிழைப் பற்றி விழிப்புணர்வு உண்டாக்குதல்
(Visit 1-3 schools to talk about Tamil and educate other kids about Tamil language )



# எதிர்வரும் நிகழ்வுகள்

## Upcoming Events

### 1. தமிழ் புத்தாண்டு (2018)

நிர்வாக குழு ஒப்புதல் அளித்ததின் அடிப்படையில், இந்த வருடம், தமிழ் புத்தாண்டை, வெகு விமர்சையாக கொண்டாட இருக்கின்றோம். இந்த தமிழ் புத்தாண்டு கொண்டாட்டமானது, சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பங்கேற்று மகிழும் வண்ணமாக இருக்கும். இந்த தமிழ் புத்தாண்டை ஆடல், பாடல், நாடகம் மற்றும் பல்சுவை நிகழ்ச்சிகளுடன் கொண்டாட இருப்பதால், அனைவரும் இதில் தவறாமல் கலந்து கொண்டு, விழாவினை சிறப்பிக்க வேண்டுகிறோம்.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை, கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்று, தங்களுடைய கலை திறமைகளை வெளிப்படுத்த ஒரு அறிய வாய்ப்பாக இந்த தமிழ் புத்தாண்டு விழாவினை பயன்படுத்துமாறு வேண்டி கொள்கிறோம். நம் இளையதலைமுறை குழந்தைகள், தமிழ் கலாச்சாரம் பற்றி அறிந்துகொள்ள கூடிய வாய்ப்பாக, இந்த விழா அமைய நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த விழாவினை நடத்திட வேண்டுகிறோம்.


**தேதி** - ஏப்ரல் 14 , 2018, சனிக்கிழமை **நேரம்** - மாலை 3.00 மணி முதல்
**இடம்** - **South Junior High School**, 3101 Cassia St, Boise, ID 83705, **Boise, ID**

நிகழ்ச்சி நிரல் பட்டியல் கூடிய விரைவில் மின்னஞ்சல் மூலம் தமிழ் மக்களை வந்தடையும். நிகழ்ச்சிகளில் பங்கேற்க அல்லது நிகழ்ச்சி தொடர்பான விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**Ram - shriramnavi@gmail.com**
**Vinod - vinothkumar309@yahoo.com**

### 2. கோடை விழா (2018)

தேதி, இடம் மற்றும் இதர விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் .

# *பாய்சி தமிழ்ப் பள்ளி*


பாய்சி தமிழ்ப் பள்ளி பாய்சி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நடத்தப்படுகிறது. பாய்சி தமிழ்ப் பள்ளி 2014 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இதில் மழலை, நிலை-2, மற்றும் நிலை-3 வகுப்புகள் நடத்தப்படுகின்றன. சென்ற வருடம் மாணவர்கள் நிலை -1 மற்றும் நிலை-2 க்கான படிப்பை நிறைவேற்றினர். தமிழ்ப் பள்ளிக்கு திரு. ராஜேஷ் நாகராஜன் அவர்கள் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டு சிறப்பாக நடத்தி வருகிறார். அவருக்கு தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நன்றிகள். மேலும் தமிழ்ப் பள்ளியில் கற்பிக்கும் அனைத்து தன்னார்வலர்களுக்கும் (volunteers) தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நன்றிகள் பல.



நிலை-1 மற்றும் நிலை-2 வகுப்புகளின் பட்டமளிப்பு விழா



# திருக்குறள் பக்கம்




திருக்குறள் உலக பொது மறை என்று அழைக்கப்படுகிறது. திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். திருக்குறள், பொய்யாமொழி (வார்த்தைகள் ஒருபோதும் பொய் ஆகாது), தெய்வநூல் (தெய்வீக உரை) என்றும் அழைக்கப்படும். திருக்குறள் கி.மு. மூன்றாம் மற்றும் முதல் நூற்றாண்டுகள் இடையே தேதியிட்ட ஒரு பதிவு என்று சொல்லப்படுகிறது. திருக்குறள் 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது (அறத்துப்பால், பொருட்ப்பால் மற்றும் காமத்துப்பால்). மொத்தம் 133 அதிகாரங்கள் கொண்டது. ஒவ்வொரு அதிகாரமும் 10 குறள்களுடன், ஒவ்வொரு குறளும் சரியாக ஏழு சொற்களுடன் இருக்கின்றன. திருக்குறள் 37 க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. திருக்குறள் எந்த மதத்தையும் சார்ந்தது இல்லை.

திருக்குறளில் நடைமுறை வாழ்க்கைக்கு தேவையான நல்ல ஒழுக்கங்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்குறளில் இருந்து சிலவற்றை இங்கே இடம் பெற செய்கிறோம்.

*அன்புடைமை (அதிகாரம்: 7 குறள்: 71)*

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புண்கணீர் பூசல் தரும்

விளக்கம் : உள்ளத்தில் இருக்கும் அன்பைத் தாழ்ப்பாள் போட்டு அடைத்து வைக்க முடியாது. அது போல் அன்புக்குரியவரின் துன்பம் காணும்போது, கண்ணீர்த்துளி வாயிலாக அது வெளிப்பட்டுவிடும்.

**Explanation :** Affection(love) cannot be confined by shutters; Uncontrollable tears will roll down spontaneously, when one sees the sufferings and sorrows of the loved ones.

**English :** Anpirkum Unto Adaikkundhaazh Aarvalar Punkaneer Poosal Tharum.

*ஒழுக்கம் உடைமை (அதிகாரம்: 13 குறள்: 131)*


ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

விளக்கம் : ஒருவர்க்கு உயர்வு தரக் கூடியது ஒழுக்கம் என்பதால், அந்த ஒழுக்கமே உயிரைவிட மேலானதாகப் போற்றப்படுகிறது.

**Explanation :** Propriety of conduct leads to eminence, it should therefore be preserved more carefully than life.


**English :** Ozhukkam Vizhuppan Tharalaan Ozhukkam Uyirinum Ompap Padum.



# [தமிழை பற்றிய சுவாரஸ்யமான தகவல்கள்]

## *தமிழ் எழுத்துக்களின் வரலாறு*




தமிழ் ஆகஸ்ட் 6, 2004 ல் டாக்டர் . அப்துல் கலாம் அவர்களால் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

## *தமிழ் எண்கள்*

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ௦ | ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ |
| சுழியம் | ஒன்று | இரண்டு | மூன்று | நான்கு | ஐந்து | ஆறு |
| chuḻiyam | oṉṟu | iraṇṭu | mūṉṟu | nāṉku | aintu | āṟu |
| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| ௭ | ௮ | ௯ | ௰ | ௱ | ௲ | |
| ஏழு | எட்டு | ஒன்பது | பத்து | நூறு | ஆயிரம் | |
| ēḻu | ettu | onpatu | paththi | nūru | āyiram | |
| 7 | 8 | 9 | 10 | 100 | 1000 | |




# பாய்சியின் புது வரவு

பாய்சிக்கு புதிதாக வந்திருக்கும் குடும்பங்களை பாய்சி தமிழ்ச் சங்கம் அன்போடு வரவேற்று அறிமுகபடுத்துகிறது. அவர்களுக்கு பாய்சி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறது.

## *Harinath & Deepika*

***About Me;***

*My name is Harinath and I'm from Chennai(TN). I'm working for Albertsons and living in Boise since May'17.*

***About my family:***



*My wife's name is Deepika and she is a homemaker. She loves cooking and also does beautiful henna designs.*

*My daughter's name is Saanvi and she's 2 years old. She likes to sing rhymes and play with building blocks. She's our cutie pie and makes our life worth living.*

*I love spending time with family and friends. We're one happy family and enjoy our time together. We are fortunate to have wonderful friends here to spend quality time together and cherish happy moments.*

# *Hariharan & Aparna*

*I am Hariharan Sreedhar and I have moved to Boise in the month of July' 17 from Texas with my wife Aparna and daughter Ranjani. We love listening to music, enjoy meeting new people and making friends. I work for Cognizant Technologies and my daughter is studying in sixth grade.*





# <u>*வாசகர் பக்கம்*</u>

சுவடி மூலமாக பாய்சி தமிழ் மக்களின் படைப்புகள் (கதை, கட்டுரை, துணுக்குகள்), சாதனைகள், புதிதாக பாய்சிக்கு குடிபெயரும் தமிழ் மக்களின் அறிமுகம் என்று அனைத்தையும் சுவடி மூலமாக பதிவு செய்ய முடிவு செய்யப்பட்டு உள்ளது. ஆகையால் தாங்கள் தங்கள் படைப்புகளை பாய்சி தமிழ்ச்சங்கத்துக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். அதிலிருந்து சிலவற்றை தேர்வு செய்து இங்கே பதிவு செய்ய இருக்கிறோம்.

**உங்கள் அனைத்து படைப்புகளையும்/தகவல்களையும் மின்னஞ்சல் மூலமாக அனுப்ப வேண்டிய முகவரி:** ***admin@boisetamilsangam.org***









